Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# The Majestic Wife Who Shows the Kural

**Dr. S. Jeyakumari,** Associate Professor, Tamil Research Centre,
Vivekananda College, Agastheeswaram - 629 701, Kanyakumari District, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0004-9329-6660**
**DOI: 10.5281/zenodo.14752872**

## Abstract

*"Thirukkural", a universal scripture that is revered by the world, is a special book that has been translated into most languages in the world. It is a guide to the best moral principles that apply to all social structures. It specifies the practices that people should follow for wellbeing. "Thirukkural" says that for a society to progress, for a home to prosper and for a family to prosper, women should take precedence. Valluvam explains the benevolent characteristics of a woman who is excellent at homemaking. A woman who is endowed with good qualities and good deeds suitable for a household and lives according to the income of her husband is like a queen to him. She will be an excellent companion for him. In addition to the concepts of Valluvam, caring for her husband and children, being hospitable, respecting monks, giving food to the poor, cooking deliciously, protecting the house and belongings and being friendly, good qualities and good deeds are the great virtues of women. This article examines how women are described as those who are capable of ruling the home with moral virtues.*

**Keywords**: Wife, Chaste woman, Good Children, *Thirukkural*, Valluvar.

## References

[1] Ilangovadigal. *Silappathikaram*, Uma Pathippagam, Chennai, 2006.
[2] Karunanithi, M. Kalaignar. *Thirukkural*. Thirumakal Nilaiyam, Chennai-17, 2003.
[3] Sivgnanam, M.P. Silappathikara Aayvurai, Poonkodi Pathippakam, Chennai-4, 2001.
[4] Parimelazhagaar Urai, *Thirukkural.* Gangai Puthaga Nilayam, Chennai, 2022.
[5] Madurai Mudaliar, K. *Naladiyar.* Pari Nilayam. Chennai, 2019.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# குறள் காட்டும் மாட்சிமை பொருந்திய மனையாள்

**முனைவர் சு. ஜெயக்குமாரி,** இணைப் பேராசிரியை, தமிழ் உயராய்வு மையம்,
விவேகானந்தா கல்லூரி, அகஸ்தீஸ்வரம் - 629 701, கன்னியாகுமரி, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0004-9329-6660
DOI: 10.5281/zenodo.14752872

**ஆய்வுச் சுருக்கம்**

*உலகம் போற்றும் பொதுமறையான திருக்குறள் பெரும்பாலான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த நூலாகும் எல்லா சமூகக் கட்டமைப்பிற்கும் பொருந்தும் சிறப்பம்சங்களைக் கொண்ட மிகச்சிறந்த அறநெறி முறைகளை போற்றும் கையேடாக விளங்கக்கூடிய திருக்குறள் மக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை மிகச் சிறப்பாக குறிப்பிடுகிறது. ஒரு சமூகம் முன்னேற, இல்லம் சிறக்க, குடும்பம் மேலோங்க பெண்கள் முதன்மை பெறுகின்றனர். அவ்வாறு இல்லறம் சிறந்தோங்க சிறப்புடன் திகழும் பெண் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்த சிறப்புகளை வள்ளுவம் மிகச்சிறப்பாக எடுத்துரைக்கிறது. இல்லறம் ஓங்க பெண்கள் இல்லறத்தை ஆளும் தன்மையுடையவர்களாக விளங்கும் தன்மைகளை கூறியுள்ள விதமாக குறித்து இக்கட்டுரை ஆய்கிறது.*

**குறிப்புச்சொற்கள்:** மனையாள், கற்புடை மகளிர், நன்மக்கள் பெறுதல், *திருக்குறள்*, வள்ளுவர்.

## முன்னுரை

உலகப் பொதுமறை என்னும் பெருமைக்குரிய திருக்குறள் எல்லைகளைக் கடந்து எல்லோராலும் போற்றப்படும் நூலாகும். தனிமனிதன் உயர்வுபெறச் செய்ய வேண்டிய அறச்செயல்களை எக்காலத்திற்கும் பெருந்தும்படி குறட்பாக்களில் அமைத்துள்ளது திருக்குறளின் சிறப்பு. சமூக நடைமுறைகள் யாவற்றுள்ளும் தலைசிறந்தது இல்லறம் நடத்துதலே ஆகும். அவ்வில்லறம் தலைசிறந்ததாக அமைய இல்லாள் இன்றியமையாதவளாகிறாள். மனையாள் கணவரை உயிரெனப் பேணியும், வலிமை வாய்ந்த கற்பினின்று வழுவாமலும், குழந்தைச் செல்வத்தை மாண்புறும் வகையில் பேணியும் வளர்த்தும் வருபவள். குடும்பம் சிறக்க முதன்மைத் தன்மை வகிப்பவள் மனைவியே ஆவாள். சீரிய மனையாள் வாய்த்துவிட்டால் இல்லறம் சிறக்கும். இல்லையேல் பாலைவனத்திற்கு ஈடாக இல்வாழ்வு வறண்டு போகும்.

## மனையாள்

'மனை' என்னும் சொல் வீடு என்று பொருள்படும். இதிலிருந்து மனையாள் அதாவது, மனையை ஆள்பவள், மனைவி போன்ற சொற்கள் தோன்றின. மனை மாட்சிமை பெற, உயரிய பண்புநலன் வாய்ந்த மனைவியே அடிப்படையாவாள்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

**மனைத்தக்க மாண்புடையாள் ஆகித்தற் கொண்டான்**

**வளந்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள். 51)**

இல்லறத்திற்கேற்ற நற்குண நற்செய்கைகள் உடையவளாய், தன்னை மணந்து கொண்ட கணவனின் வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கை நடத்துபவள் அவனுக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாவாள்.

கணவனையும், குழந்தைகளையும் பேணுவதோடு, அன்பாக விருந்தோம்புதலும் துறவியர்களைப் போற்றுதலும், இரப்போர்க்கு ஈதலும் சுவையாக சமைத்தலும் வீட்டையும் பொருட்களையும் பாதுகாத்தலும், நட்புடன் பழகுதலும் நற்குணங்களும், நற்செய்கைகளும் பெண்களின் பெருங்குணங்கள் ஆகும்.

**மனைக்கு விளக்கம் மடவாள்,**

**மடவாள் தனக்கு தகைசால் புதல்வர்,**

**மனக்கினிய காதல் புதல்வர்க்குக் கல்வியே**

**கல்விக்கும் ஓதின்**

**புகழ்சால் உணர்வு (நான்மணி., 101)**

மனைவி வீட்டுக்கு ஒளி தரும் விளக்கு; குழந்தைகளுக்கு கல்வி தரும் விளக்கு எனப் பல பரிமாணங்களை உடையவளாகத் திகழ்கிறாள். ஒருவன் செல்வம், அதிகாரம் போன்றவற்றில் எவ்வளவு சிறந்தவனாக இருந்தாலும், அவனுடைய மனைவி இல்லறத்திற்கேற்ற நற்குண செய்கைகள் பொருந்தியவளாக இல்லாவிட்டால், அச்சிறப்புகள் சிறப்புடையதாகக் கொள்ளப்பட மாட்டாது. இதனை,

**மனைமாட்சி இல்லாள் கண் இல் ஆயின் வாழ்க்கை**

**எனை மாட்சித்து ஆயினும் இல் (குறள். 52)**

என வள்ளுவம் விளக்குகிறது.

கணவனின் சொல்கேட்டு நடக்காமை மற்றும் குடும்பத்தை கவனிக்காமல் புறக்கணித்தல் இன்றைய காலகட்டத்தில் பெருகிக் கொண்டே வருகின்றது. இல்லறத்தான் சிறப்புப் பெற இல்லாளும் சிறப்புடையவளாக விளங்க வேண்டும். தனக்கும் தன் கணவனுக்கும் புகழை விரும்பிய மனைவியைப் பெறாதவனுக்குத், தம்மை பழித்துரைக்கும் பகைவர் முன் ஆண் சிங்கம் போல் இறுமாப்புடன் நடக்கும் பெருமித நடை இல்லை. அவர்கள் முன்னிலையில் தலைகவிழ்ந்து போகக் கூடிய தாழ்வு நிலையே அமையும்.

**புகழ் புரிந்தில்லிலோர்க்கு இல்லை இகழ்வார் முன்**

**ஏறுபோல் பீடு நடை (குறள். 59)**

கற்புடைய மனைவியாலேயே கணவன் மதிக்கப்படுதலை, இலக்கியங்கள் பலவும் எடுத்தியம்புகின்றன. மனையாளை முன்னிலைப்படுத்தி, அவளால் பெருமை பெற்ற கணவனை,

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**செயிர் தீர் கற்பிற் சேயிழை கணவ (புறம்., 3)**

**அறம்பாடிற்றே ஆயிழை கணவ (புறம்., 34)**

என்று புறநானூறும்,

**சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ (பதிற்., 88)**

என்று பதிற்றுப்பத்தும் எடுத்தியம்புகிறது. கற்புடைய மனைவியால் அறம் பொருள் இன்பம் முதலிய பேறுகள் வந்து சேரும். வாழ்நாளும் சிறப்புப் பெறும். தன் கற்பையும், தன் கணவனையும் காத்து அதற்கான மதிப்பினையும் பேணி பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் சிறிதும் சோர்வுறாதவள் இல்லறத்திற்குச் சிறந்தப் பெண்ணாவாள். இத்தகையப் பெண்ணே இச்சமூகத்திற்குத் தேவை. இத்தகைய குடும்பத் தலைவிகளால் நாடும் வீடும் நலம் சூழும்.

**இல்லறத்திற்கு ஏற்றவள்**

இல்லறத்திற்கு ஏற்ற பெண்ணுக்கான தகுதியை வள்ளுவர் மிக அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

**தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற**

**சொற்காத்துச் சோர்விலாள் பெண் (குறள். 56)**

அதாவது, தன் கற்பையும் உடல்நலத்தையும் காத்து தன் கணவனையும் உணவு, மருந்து முதலியவற்றால் பேணிப் பாதுகாத்து தம் இருவரையும் பற்றிய தகுதி வாய்ந்த உலக மதிப்பையும் காத்து பிறர்க்குச் செய்யும் அறவினைகளிலும் தளர்ச்சியில்லாதவள், இல்லறத்திற்குச் சிறந்த பெண்ணாவாள் என இல்லறத்தை நடத்திச் செல்ல பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணநலன்களை மிக அழகாக எடுத்துரைக்கிறார். பெண்களுக்கு இல்லறத்தில் ஆண்களைவிட மிக அதிகமான கடமைகள் உண்டு. பெரியோர்களைப் பராமரித்தல், குழந்தைகளைப் பராமரித்தலோடு எதிர்கால வாழ்வை வளமாக்கும் வகையில் அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்து அறநெறிமுறைப்படி குழந்தைகளை வளர்த்தல் ஆகிய பெரும்பணிகளுக்கிடையே, தான் கற்ற கல்வி பயன்படும் வகையில், சமூகத்திற்குத் தன் பங்களிப்பைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்ற பட்சத்தில், எல்லா சூழ்நிலைகளையும் சமாளித்து எல்லா கடமைகளையும் சோர்வின்றி திட்டமிட்டு செயலாற்றுபவள். செய்யும் செயல்பாடுகளில் சிறிதும் தொய்வின்றி தேனீ போல சுறுசுறுப்புடன் செயல்படும் பெண்கள் எல்லோராலும் போற்றப்படுவார்கள்.

இத்தகைய இல்லறப் பண்புகளுடன் தன் கணவனின் பொருள் வளத்துக்குத் தக்கவாறு நற்பண்புகளுடன் குடும்பம் நடத்தும் மனைவி கணவனின் வாழ்வுக்குப் பெருந்துணையாக அமைவாள். இதனை வள்ளுவர்,

**மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**

**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (குறள். 51)**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்கிறார். நற்பண்பு உடைய ஒரு பெண் ஒருவனுக்கு மனையாளாக வாய்த்து விட்டால் அவன் உலகில் பெறும் பேறு வேறில்லை. எல்லாமும் உடையவனாக அவன் வாழ்க்கை நிறைவாக அமையும்.

**கற்புடை மகளிர்**

பெண்களுக்கு கற்பு உயிர் போன்றது. அது உயிர்போல் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். உயிர்போனால் மீண்டு வாராததைப் போல, கற்பிழந்தால் மீளாது. உயிர்போன உடலை, யாரும் விரும்பார். அது இழிவாகக் கருதப்படும். அதற்கு ஈடாக கற்பிழந்தப் பெண்ணின் நிலையும் கூறப்படும். எனவே கற்பினைக் காக்க நல்ல நெறியில் பெண்கள் விளங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர். கற்புடைய மகளிர் தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்பட்டனர். அவர்கள் மழையைப் பெய்வாயாக என்று உரைத்தால் மழை பொழியும். தொன்றுதொட்டு தொழுது வரும் தெய்வத்தைத் தொழாமல் தன் கணவன் பாதங்களைத் தொட்டுக் கும்பிடும், கற்புடைய மனைவி பெய்யென்று சொன்னவுடன் மழை பெய்யும்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (குறள். 55)**

பெண்ணிடத்து கற்பு என்னும் கலங்காத நிலை நீங்காமல் நிலைபெற்று இருத்தல் வேண்டும். இத்தகைய தன்மை உடைய மனைவியைப் பெற்றவனுக்கு இவ்வுலகில் வேறு தகுதியுடைய எப்பொருட்களும் இருக்க முடியாது. இதனை,

**பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின் (குறள். 54)**

என உரைக்கிறார் வள்ளுவர். சிலப்பதிகாரமும், பத்தினிப் பெண்கள் இருக்கும் நாட்டில், வானம் பொய்க்காமல் மழைதரும்; வளம் பிழைப்பில்லாமல் ஓங்கி நிற்கும் என எடுத்துரைக்கிறது.

**வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது**
**நீணில வேந்தர் கொற்றம் சிதையாது**
**பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு (சிலம்பு., 15, வரி. 145-147)**

கணவனைப் போற்றும் பெண்கள் மண்ணுலகத்தில் மட்டுமன்றி விண்ணுலகத்திலும் சிறப்படைவர்.

**நன்மக்கள் பெறுதல்**

இல்வாழ்க்கையினால் கிடைக்கும் பெரும் பேறே குழந்தை செல்வம் தான். குழந்தைப் பேறு தான் ஒரு பெண்ணிற்குப் பெருஞ்சிறப்பை நல்குகின்றது. இல்வாழ்க்கையைப் பூர்த்தி செய்யும் அணிகலன் நல்ல பண்புடைய மனையாளும் குழந்தைப் பேறுமே ஆகும். இதனை,

**மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு (குறள். 60)**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

என்னும் குறள் எடுத்தியம்புகிறது.

இம்மையிலும் மறுமையிலுமாக எதிர்காலத்தில் தம் மக்கள் தமக்கு செய்யக் கூடிய நன்மையை எதிர்நோக்காமல் அவர்களை குழவிப் பருவத்திலும், பிள்ளைப் பருவத்திலும் சிறந்த செல்வமாகப் பாராட்டுவது பெற்றோர் வழக்கம். அந்த குழந்தைகளைச் சிறப்புடன் வளர்த்தெடுக்க வேண்டும். அப்பண்புடைய நல்ல குணங்களை உடைய மக்களைப் பெற்றால், அதுவே எல்லா பிறவிகளிலும் நமக்கு இன்பம் பயக்கும் துன்பங்கள் என்றென்றைக்கும் அணுகாது.

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின் (குறள். 62)**

இந்நிலை உருவாக, பெண் சிறப்புடையவளாக இருக்க வேண்டும். அப்போது தான் குடும்ப உறவுகள் பலப்படும்.

**நல்ல மனையாள் பெறற்கரிய பெரும்பேறு**

பொது வாழ்வில் தலைவனோ, தலைவியோ சிறந்தோங்க வேண்டுமாயின் வாழ்க்கைத் துணை சிறப்பாக அமைய வேண்டும். ஏனெனில், இவ்வுலகில் ஒருவன், மனையாளோடு சேர்ந்து வாழும் குடும்ப வாழ்வே முதலிடம் பெறுகிறது. கணவனின் உள்ளக் குறிப்பறிந்து செயல்படுவதோடு, வரவிற்கு ஏற்றாற் போல் செலவினை மேற்கொள்ளும் தன்மை உடையவளாக இருத்தல் வேண்டும். அஃதோடு தன் கணவனுக்குத் தொண்டு செய்யும் நல்லுள்ளம் உடையவளாக இருத்தல் வேண்டும். அத்தகைய பெண்கள், தேவருலகில் அவர்களால் பெருஞ்சிறப்புச் செய்யப்படும் தகுதியுடையவர்களாகத் திகழ்வாள்.

**பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்பு**
**புத்தேளிர் வாழும் உலகு (குறள். 58)**

மேலும்,

**மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்**
**காண்டற்கு அரியதோர் காடு (நாலடி., 361)**

என்னும் பாடலில் பெண்ணின் பெருமையை எடுத்துரைக்கிறது. எவ்வளவு பொருளுடையவனாக ஆடவன் இருப்பினும், பெருமை பொருந்திய மனைவி வாய்க்கப் பெற்றால் மட்டுமே வீடு வீடாகத் திகழும். இல்லையேல் காட்டிற்கு சமமாகும்.

ஒருவனுடைய மனைவி நற்செய்கைச் சிறப்புடையவளானால் அவனுக்கு இவ்வுலகில் 'இல்லாதது' என்று எதுவும் இல்லை. மாறாக அம்மனைவி சிறப்பில்லாதவளாக இருந்தால் அவனுக்கு இவ்வுலகில் 'உள்ளது' என்று எதுவும் இல்லை. பெண்கள் சிறப்பும், நற்குணமும் பெற்றுத் திகழ்ந்தால், அக்குடும்பம் சிறந்தோங்கும்.

குறள் காட்டும் பெண்மை குறித்த இச்செய்திகள், பெண்ணியப் பார்வை கொண்டோருக்கு மூடத்தனமாக ஏற்றுக் கொள்ளவியலாத கருத்துக்களாகத் தோன்றலாம்.

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

ஆனால், இன்றைய சமூகச் சூழலை வைத்துப் பார்க்கும் போது, சமூகத்தில் அதிகரித்து வரும் குற்றங்கள், இளைஞர்கள் சீரழிந்து நிற்கும் நிலைகள் ஆகியவை, வரம்பின்றி பலரும் வாழும் சூழல்களை ஏற்படுத்தியிருப்பதாக உணர முடிகிறது. இவற்றைக் களைய புதுமையான சமூகத்தை உருவாக்கப் பெண்களால்; சிறந்த இல்லத் தலைவிகளால் மட்டுமே முடியும். சிறுவயது முதலே ஆண், பெண் பாகுபாடின்றி சமூகத்தில் தலைமைப் பண்புடையவர்களாகக் குழந்தைகளை அறவழியில் உருவாக்க பெண்ணின் வளர்ப்பும், அவளின் அரவணைப்பும், ஆலோசனைகளும், நற்குணங்களும் உயர் கற்பும், சீரிய ஒழுக்கமும் துணை நிற்கும் என்பதில் வியப்பில்லை.

### குறிப்புகள்

[1] இளங்கோவடிகள். *சிலப்பதிகாரம்.* உமாபதிப்பகம், சென்னை, 2006.
[2] கருணாநிதி, மு, கலைஞர். *திருக்குறள்.* திருமகள் நிலையம், தி.நகர். சென்னை-17, 2003.
[3] சிவஞானம், ம,பெ. *சிலப்பதிகார ஆய்வுரை.* பூங்கொடி பதிப்பகம், சென்னை-4, 2001.
[4] பரிமேலழகர் உரை. திருக்குறள். கங்கை புத்தக நிலையம், சென்னை, 2022.
[5] மதுரை முதலியார், கு. *நாலடியார்.* பாரி நிலையம், சென்னை, 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.